# எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்கள் நேரிடும் மனித உரிமை மீறலை தெற்காசியாவில்லுள்ள தேசிய மனித உரிமை கழகத்திடம் எப்படி அறிவிப்பது

**அருஞ்சொற்பொருள்**

**மனித உரிமை** என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கவேண்டிய அடிப்படை உரிமை ஆகும். அதாவது வாழ்வுரிமை, பாதுகாப்பாக இருபது, சமமாக நடத்தப்படுவது, அந்தரங்கஉரிமை, மற்றவர்களை சந்திக்கவும், குழு அமைக்கவும் உரிமை, பேச்சுரிமை மற்றும் நியாயமற்ற தடுப்பிலிருந்து பாதுகாப்பு என்பவை ஆகும்.

**எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு** என்பது ஒருபார் புணர்சியில் ஈடுபடும் பெண், தன்பாலினசேர்க்கை இனத்தவர், திருநங்கைகள், இடையிலிங்கம், விந்தை – போன்ற வித்தியாசமான பாலியல் நாட்டம், பாலின அடயாளங்கள் மற்றும் வெளிப்பாடுகள் உள்ளவர்கள், மற்றும் இவையாவிலும் உட்படாத, தெற்காசியாவில் கூறப்படும் ஹிஜ்ரா, கவஜசிரகொத்தி, மெதி, இவர்களின் தொகுப்பு ஆகும்.

**புகார்** என்பது எழுத்துமூலமாகவொ, வாக்குமூலமாகவொ கொடுக்கபடும் குற்றச்சாட்டு ஆகும். ஒருவரின் மனித உரிமை மறுக்கப்பட்டாலொ அல்லது மீறுதல் நடந்தாலொ மற்றும் என்ன, அல்லது எங்கு, எப்படி, யாரால் உரிமை மீறல் சம்பவம் நடந்தது என்பதை குறிக்கும் பட்டியல்.

**புகார்தாரர்** என்பவர் புகார் கொடுப்பவர்.

**மீறுபவர்** என்பவர் மற்றொருவரின் மனித உரிமைகளை மீறுபவர்.

## 1. தேசிய மனித உரிமை கழகத்தின் (என்.ஹெச்.அர்.ஐ) பங்கு என்ன?

என்.ஹெச்.அர்.ஐ என்பது ஒரு நாட்டில் உள்ள மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பாகும். எல்லா மக்களுக்கும் மனித உரிமை அடிப்படையானது. மக்கள் சுதந்திரத்துடனும், அந்தஸ்துடனும் வாழ்வதற்க்கு மனித உரிமை அத்யாவஸ்யமானது.

எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் மனித உரிமைகள், உலகநாடுகள் கையெழுத்திட்டுள்ள சர்வதேச ஒப்பந்தத்திலும், அவரவர் அரசியலமைப்பு சட்டத்திலும் எழுதப்பட்டுள்ளது.

இந்த மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக உரிமை மீறல்களை கண்டறிந்து உரிய தண்டனை பெற்றுக் கொடுப்பதே என்.ஹெச்.அர்.ஐ உடைய முக்கிய பங்காகும்.

பொதுவாக, காவல் துறை, அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை அதிகாரிகள் போன்ற பொதுத்துறை அலுவலர்களால் மீறப்படும் மனித உரிமையை என்.ஹெச்.அர்.ஐ கண்டறிவார்கள். சில சமயங்களில் தனியார்த்துறை அதிகாரிகளால் மீறப்படும் மனித உரிமைகளை தீரக்கவும் உதவுவார்கள்.

## 2. எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்கள் நேரிடும் மனித உரிமை மீறல்கள் என்னென்ன?

சாதாரண மக்களை போல, எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்களுக்கும் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் நல்வாழ்வும் பெறவேண்டுமென்றால் அவர்களுக்கு, மனித உரிமையும், பாதுகாப்பும் அளிக்கப்படவேண்டும். ஆனால் அனுபவத்தில் தெற்காசிய நாடுகளில் நிலவும் குற்றவியல் நீதிகள், ஒரின பாலியல் வழக்கத்தை

தண்டிப்பதிலும், காவல் துறைக்கு திருநங்கையர்களை 'பொது தொல்லைக்காக' அச்சுறுத்தி கைது செய்யும் உரிமை கொடுக்கப்படுவதாலும், பல சமயங்களில் எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்களுக்கு உரிமைகள் கிடைக்காமல் போகின்றன.

எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்கள் எப்பொழுதும் பாகுபடுத்தப்படுகிரார்கள். இது வீடுகளில் தொடங்கி பள்ளி, கல்லூரிகளிலும், வேலை இடங்களிலும், மருத்துவ உதவி நிலயங்ககளிலும் நடக்கிறது. இவர்கள் எல்லா இடங்களிலும் விரும்பப்படாத வர்களாகிரார்கள். இவர்களது பாலியல் நாட்டம் காரணமாக வேலையை இழக்கும் நிலயும் ஏற்ப்படுகிறது. திருனங்கயர்கள் அவர்கள் விரும்பும் பாலில் அடையாளம் கண்டுகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் இவர்களுக்கு அடையாள கோப்புகள் பெற முடிவதில்லை.

மனஅளவிலும், உடல்அளவிலும் சுய மரியாதை மீறப்படுகிறது. உடல் வன்முறை, திணிக்கப்படுகிறது. மற்றும் கட்டாய மாற்று சிகிக்சை, பயமுறுத்தல், மிரட்டி பணம் பறித்தல், அவமதிப்பு மற்றும் கடும்சொற்க்கள் இவை பலநேரங்களிலும் நடக்கிறது. இதனால் அவர்களுக்கு வன்முறையிலிருந்து விடுதலையும், பாதுகாப்பிற்க்கான நம்பிக்கையும் விலை பேசப்படுகின்றன.

எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்களும் ஹெச்.ஐ.வீ., பாலியல் சுகாதாரம், பற்றிய அறிக்கைகளை வெளியிடும் அமைப்புகளும், இன்று, கைது, வன்முறை மற்றும் மூடப்படும் நிலைக்கும் தள்ளப்படுகிரார்கள். இதனால் அவர்களுக்கு பேச்சுரிமையும், நல்ல ஆரொக்கியதிற்கான அதிகாரமும் கிடைக்காமல் போகிறது.

**3. என்.ஹெச்.அர்.ஐ காரர்கள் எப்படி இந்த மிரடல்களை தீர்த்துவைக்கமுடியும்?**

எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்கள் நேரடியாகவொ அல்லது அவர்களது பிரதிநிதிகள் மூலமாகவொ என்.ஹெச்.அர்.ஐ களை சந்தித்து, அவர்களுக்கு ஏற்பட்ட மனித உரிமை மீறல்களை தெரிவிக்கலாம். இவ்வாரு பெறப்படும் கொரிக்கைகளை பற்றி ஆராய்ந்து உண்மையை கண்டரிந்து, அவர்களுக்கு ஏற்பட்ட மீறல்களை பற்றி விசாரிப்பது என்.ஹெச்.அர்.ஐ உடைய கடமையாகும்.

**4. என்.ஹெச்.அர்.ஐ டம் யார் யார் புகார் கொடுக்க முடியும்?**

ஒரு எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மனிதருக்கு மனித உரிமை மீறல் நடந்திருந்தால், அவர் நேரடியாகவொ, நண்பர்கள் வழியாகவொ, குடும்பத்தினர் வழியாகவொ, உடன் இருபவர்கள் வழியாகவொ என்.ஹெச்.அர்.ஐ க்கு புகார் கொடுக்கலாம். என்.ஹெச்.அர்.ஐ அலுவலகத்தில் எழுத்து மூலமாகவொ, தொலைபெசி மூலமாகவொ, மின்னனுஅஞ்சல் வழியாகவொ, நேரடியாகவொ புகார் செய்யலாம்.

ஒரு சங்கம் அல்லது குழுவும் எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்களுக்காக புகார் செய்யலாம்.

என்.ஹெச்.அர்.ஐ ன் புகார் செய்யும் முறை, சாதாரண மக்களால் சுலபமாக செய்யும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞரின் உதவி தேவையில்லை.

மனித உரிமை மீறல்கள் பற்றிய புகார்கள் பெறப்படாமலெ அவ்வாறு மீறல்கள் நடந்திருப்பது தெரிந்தால் தாமாகவெ முன்வந்து விசாரணை நடத்த என்.ஹெச்.அர்.ஐ க்கு அதிகாரம் உள்ளது.

**5. என்.ஹெச்.அர்.ஐ க்கு எப்படி புகார் கொடுப்பது?**

என்.ஹெச்.அர்.ஐ க்கு புகார் கொடுக்கும் முறை மிகவும் சுலபமானது. இதற்கு கட்டணம் எதுவும் இல்லை. அப்படி புகார்தாரர் புகார் செய்ய ஏதாவது பணம் செலவு செய்திருந்தால் அதனை திருப்பிக் கொடுக்க சில என்.ஹெச்.அர்.ஐ க்கு (இலங்கை) அதிகாரம் உள்ளது.

பொதுவாக புகாரில் மனித உரிமை மீறலின் உண்மைகளை தெரிவிப்பதுடன், மீறுபவரின் எந்த செயல், அல்லது செயலின்மையால் மீறல் நடந்தது என்பது தெளிவாக குறிப்பிடப்படவேண்டும். மீறல்கள் நடந்தவுடனெ புகார் கொடுக்கப்பட வேண்டும். சில என்.ஹெச்.அர்.ஐ கள் புகார் கொடுப்பதர்க்கான கால அளவையும் நிர்ணயித்திருக்கிரார்கள். இந்தியாவில் ஒரு வருடத்திற்க்கு மேலான உரிமை மீறல் புகார்கள் ஏற்க்கப்படமாட்டாது. மற்ற சில நாடுகளில் கால அளவு தளர்த்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கால அளவு மூன்று மாதமாக நிர்ணயிக்க ப்பட்டுள்ளது.

**6. என்.ஹெச்.அர்.ஐ க்கு புகார் கிடைத்ததும் அவர்கள் என்ன செய்வார்கள்?**

என்.ஹெச்.அர்.ஐ கள் அவர்களுக்கு கிடைக்கும் புகார்களை ஆய்வு செய்து மனித உரிமை மீறல் நடந்துள்ளதா, எந்தவிதமான மனித உரிமை மீறல், யாரால் நடந்தது என்பதை கண்டுபிடிக்க அவர்களுக்கு பலவிதமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை கண்டுபிடிக்க, என்.ஹெச்.அர்.ஐ கள் விசாரணை நடத்தவும், புலனாய்வு செய்யவும் அதிகாரம் உள்ளது.

விசாரணை நடத்தும்போது என்.ஹெச்.அர்.ஐ க்கு நீதிமன்றத்தின் அதிகாரம் உள்ளது. அவர்களுக்கு கீழ்க்கண்ட அதிகாரங்களும் உள்ளன:

- ஒரு சாட்சியை அவர்கள் அலுவலகத்திற்க்கு வரவழைத்து, தேவையான தகவல்கள், ஆவணங்கள் மற்றும் கோப்புகளை பெறலாம்; மற்றும்
- வாக்குமூலமாக சாட்சி பெறலாம்.

**7. புகார்தாரர்களுக்கு என்.ஹெச்.அர்.ஐ லிருந்து எந்தவிதமான உதவிகள் கிடைக்கும்?**

மனித உரிமை மீறல் நடந்ததாக கண்டுபிடிக்கபட்டால் என்.ஹெச்.அர்.ஐ அவர்களுக்கு பலவிதமான உதவிகளை செய்வார்கள்.

புகாருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க அரசுக்கு பரிந்துரை செய்வார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கொ, அவர் குடும்பத்தினர்க்கொ நிதிஉதவி செய்யவும், குற்றவாளிக்கு எதிராக வழக்கு தொடரவும் என்.ஹெச்.அர்.ஐ க்கு அதிகாரம் உண்டு.

நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மனித உரிமை மீறலுக்கான நீதிமன்ற உத்தரவு பெற்றுத்தர முடியும். இந்த உத்தரவு, குற்றவாளிக்கு குற்றத்தை திருத்தவொ அல்லது பிழை செலுத்தவொ பயன்படுத்தப்படும். பாதிக்கப்பட்டவர் காவலில் இருக்கும் போது அவர் முறையாக நடத்தப்படுகிராரா என்று அறிய என்.ஹெச்.அர்.ஐ அவர்களை சென்று பார்க்கவும் அதிகாரம் உண்டு.

சிலசமயங்களில் (இலங்கை போன்ற) இரு பிரிவினரிடயே சமாதான பேச்சுவார்த்தை நடத்த முயற்ச்சித்து அது தோல்வி அடைந்தால் மட்டுமெ வழக்கு தொடர முனைவார்கள்.

சில என்.ஹெச்.அர்.ஐ கள் தெற்க்காசியாவில் எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்களின் உரிமைகளை கீழ்க்கண்டவாரு அனுகூலித்துள்ளன:

- ஒருவருக்கு பாலியல் நாட்டத்தால் வேலை இழக்க நேரிட்டபோது அவருக்கு வேலையை திரும்ப பெற்றுக்கொடுத்தல்.
- திருநங்கைகள் க்கு எதிராக காவல்துறையின் பலாத்காரத்தை தடுப்பது.
- திருநங்கையான கல்லூரி அசிரியர்க்கு வீடுகிடைகாமல் தடுத்த கல்லூரிக்கு எதிராக அறிவிப்பு அனுப்புதல்.

**8. என்.ஹெச்.அர்.ஐ ல் கொடுக்கப்படும் புகார் எவ்வாறு ரகசியமாக வைக்கப்படுகிறது?**

என்.ஹெச்.அர்.ஐ க்கு வரும் குற்றச்சாட்டுகளை ரகசியமாக வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், எல்.ஜீ.பீ.டீ.ஐ.கீயு மக்களின் கடினமான சூழ்நிலையை மனதில் கொண்டு புகார்தாரரின் அடையாளம் வெளிப்பட்டால் அவருடைய பாதுகாப்பிற்க்கு ஏற்படும் அச்சுறுத்தலை கணக்கிலெடுத்து புகார்தாரர் விண்ணப்பித்தால் அவரை பற்றிய விவரம் ரகசியமாக வைக்கப்படும்.

**மேலும் நீங்கள் இருக்கும் இடத்திற்க்கு அருகில் உள்ள என்.ஹெச்.அர்.ஐ கள் பற்றிய விவரம் அறியவும், ஆன்லைநில் புகார் செய்யவும் கீழ்க்கண்ட வலைத்தளத்தில் தொடர்பு கொள்ளலாம்:**

ஆப்கானிஸ்தான்: http://www.aihrc.org.af/
வங்கதேசம்: http://www.nhrc.org.bd/
இந்தியா : http://nhrc.nic.in/
நேபாளம் : http://www.nhrcnepal.org/
பாகிஸ்தான்: http://www.mohr.gov.pk/
இலங்கை: http://hrcsl.lk/